பித்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றங்கள் சிறந்த இடங்களில் அமைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒவ்வொரு மாவட்டமும் அதற்கான செயற்குறிப்பைத் தயாரித்து வருகிருர்கள். அந்தச் செயற்குறிப்பு வந்த தற்குப் பிறகு படிப்படியாக பேஸ்ட் புரோகிராமாக எல்லா மாவட்ட நீதி மன்றங்களுக்கு சிறந்த கட்டிடங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் மிகுந்த முக்கியத்துவத்தைத் தந்துவருகிறது.

**நாகப்பட்டினம் தொழிற்பேட்டை**

* 300 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தொழிற்பேட்டை கட்டி முடிப்பதற்கு ஆன மொத்த செலவு எவ்வளவு ?

(இ) இப்பொழுது அங்கு என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** (அ) ரூ. 4,19,470.

(இ) இந்தத் தொழிற்பேட்டையில் மொத்தம் நான்கு தொழிற் கூடங்கள் 18--5--1970-ல் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றில் ஒரு தொழிற் கூடம் இரும்பினுலும் எஃகினுலும் ஆன நிர்மாண வேலைகள் செய்தல் (Iron and Steel Fabrication ) மற்றும் கூரைகளுக்கு வேண்டிய உத்திரங்கள் ( Trusses ) இரும்புக் கதவு, சன்னல்கள் தயாரித்தல் (gates and windows manufacture ) முதலியவைகளுக்காக 13--7--1970-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது என்ன என்ன தொழில்கள் அங்கே செயல்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் அலாட்மெண்ட் செய்ததைப்பற்றிச் சொன்னேன். தொழில் ஆரம்பித்து நடத்துகிருர்களா என்பதைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** ஏராளமான பணம் செலவு செய்து எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்படாமல் சும்மா பூட்டிக் கிடக்கிறது. எனவே, தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு 1967-ஆம் ஆண்டு 3 லட்சத்து 23 ஆயிரம் என்ற அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி வாங்கியிருக்கிருர்கள். 1970-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே யார் யார் வாடகைக்குக் கேட்கிருர்களோ அவர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறோம். நாம் தொழில் நடத்துவதில்லை. அவர்கள் முன்வந்திருக்கிருர்கள். எந்த எந்தத் தொழி லுக்கு அலாட் செய்து இருக்கிறோம் என்பதைப்பற்றிச் சொன்னேன். தொழில்கள் ஆரம்பிக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. **கனம்**

உறுப்பினர் போன்றவர்கள் இன்னும் பலரைச் சேர்த்து அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்குக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஏற்பாடு செய்தால் அரசாங்கம் கட்டடம் கட்டுவது, பண உதவி செய்வது, இயந்திரங்கள் வாங்கிக்கொடுப்பது, மூலப்பொருட்கள் பெற்றுத் தருவது இவற்றையெல்லாம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டைகளிலே தனியார் தொழில்களை நடத்தினாலும் நாம் மூலதனம் போட்டிருக்கிறோம், ஏராளமான பணம் போட்டு இருக்கிறோம். சிறு தொழில்கள் நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றது. நம் மாநில அரசு வெளிநாடுகளுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ தேவையான பொருட்களை எவை எவை என்று அறிந்து அந்த வகையிலே உற்பத்தி செய்வதற்கு சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் தொழிலதிபர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? சிறு தொழில்கள் அபிவிருத்தியடைய சர்க்கார் முயற்சியெடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டிலே சிறு தொழில்களுக்கு ஆபத்து இருப்பதாக யாரும் என்னிடத்திலே சொல்லவில்லை. புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே ஏராளமான சிறு தொழில்கள் தொடங்கப்படுகின்றன என்பதை அறிகிறோம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் காம்ப்ளக்ஸ் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலம் சிறப்பான முறையிலே நடைபெறுவதாக எல்லா மாநிலங்களின் அமைச்சர்களும் சொல்லியிருக்கிறார்கள். சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இந்த அரசாங்கம் ஊக்கம் தருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற கருத்து உற்பத்தி செய்த பொருள்களுக்கு சந்தை தேடித்தருவது, மார்க்கெட்டிங் பெஸிலிட்டிஸ் செய்துகொடுக்கின்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வது என்பது. அப்படிச் செய்தால் சிறு தொழில்களுக்கு வாய்ப்பு இருக்கும் என்பது உண்மை. அதற்காகத்தான் சர்க்கார் ஒரு சிறு தொழில் வாரியத்தை ஏற்படுத்தித் தனியார் துறையில் சிறு தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வகையில் அவர்களுக்குச் சந்தையைத் தேடிக்கொடுப்பதற்கும் மூலப்பொருட்களை வாங்கிக்கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### *Working Group for Electronics Industries*

* 301 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have constituted any Working Group to study the Electronics Industry in this State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் குறிப்பாக சிறுதொழில் பிரிவில் மின் அணுப் பொருள்கள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக மின் அணுப் பொருள் உற்பத்தித் தொழிலுக்கான செயற்குழு ஒன்றை அமைப்பதற்கு 1970 ஏப்ரலில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மின்